**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு**
**வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

**இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)**

SRI LANKA
CONVENTION BUREAU

# வெற்றிடம்

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB) என்பது கூட்டங்கள், ஊக்கப் பயணங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (பொதுவாக MICE சுற்றுலாத்துறை என அழைக்கப்படும்) ஆகியவற்றை மேம்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாகும். பின்வரும் பதவிக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து இலங்கை மாநாட்டு பணியகத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உதவி முகாமையாளர் - பெறுகை பதவி (Assistant Manager - Procurement)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C.) அங்கீகரிப்படும் பெறுகை / தொடர் வழங்கல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வர்த்தகம் அல்லது பதவியின் துறையோடு தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் பட்டம் பெற்றுள்ளமை.

  மற்றும்

- ஆரம்பப் பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பதவியுடன் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

- மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்.

**வயது:**

- 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

சம்பளக் குறியீடு மற்றும் ஊழியர் பிரிவின் மாதாந்த சம்பள அளவு (2025.01.01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்):

- MM 1-2-2025: ரூ. (94,170 – 10x2480 + 15x3,450 – 170,720)

(மேற்கண்ட சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படும்).

**ஏனைய பொதுவான தகுதிகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- பதவியின் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், தீவின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியானவராக இருக்க வேண்டும்.
- சிறந்த தார்மீக நடத்தையைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்பும் முறை:**

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் சுயமாகத் தயாரித்துக்கொண்ட விண்ணப்பத்துடன் (CV) கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய அனைத்துச் சான்றிதழ்களின் பிரதிகளையும் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

தயவுசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உதவி முகாமையாளர் - பெறுகை பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடவும்.

அரசாங்க திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / சட்டப்பூர்வ சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் / நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை மாநாட்டுப் பணியகம்,**
**4 ஆம் மாடி, ஹோட்டல் பாடசாலைக் கட்டிடம்,**
**இல. 78, காலி வீதி,**
**கொழும்பு 03.**